வெளிநாட்டு முதலீடுகள்

ஏமாற்றுகிறது திமுக அரசு

சென்னை, நவ.15: தமிழகத்தில் வெளி நாடு முதலீடு களை ஈர்ப்பதாக திமுக அரசு மக் களை ஏமாற்றுகி றது; தமிழகத்தில் முதலீடு செய்யவி ருந்த கொரிய நிறு வனம், ஆந்திரத்துக் குச் சென்றதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுதான் காரணம் என்று அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டி யுள்ளார்.

இதுகுறித்து 'எக்ஸ்' பக்கத்தில் அவர் சனிக்கி ழமை வெளியிட்ட பதிவு: கொரிய நாட்டைச் சேர்ந்த ஹ்வாசங் நிறுவனம், தமிழ கத்தில் தொழில் தொடங்க வுள்ளதாக அறிவித்திருந்த நிலையில், தற்போது தமிழ கத்தை விட்டு, ஆந்திர மாநி லத்தில் தொழில் தொடங் கவுள்ளதாக அறிவித்துள் ளது.

4 ஆண்டுகளாக, முதல்வ ரின் வெளிநாட்டு சுற்றுலா, உள்ளூரில் முதலீட்டாளர் மாநாடுகள் ஆகியவற்றால் தமிழகத்துக்கு என்ன பயன்? வருவதாக சொன்ன நிறு வனங்களே திரும்பச் செல் லும் நிலையில்தான் மு.க.ஸ் டாலினின் ஆட்சி உள்ளது. இதற்கான காரணங்களை ஆய்வுசெய்யவேண் டியது அவசியம்.

சீர் கெ ட் ட சட்டம்-ஒ ழுங்கு, படுகுழியில் பெண் கள் பாதுகாப்பு, விண்ணை முட்டும் கமிஷன் ஊழல் கள் என அடுப் படையே சீர்கு லைந்த இந்த ஆட்சி, விளம் பர மாடல் நிகழ்ச்சிகளை யும், வண்ணஜால விளம்ப ரங்களையும் காட்டினால் மட்டும் தொழில் நிறுவனங் கள் வந்துவிடுமா? தமிழகம், தொழில்துறை வாய்ப்புக்கு ஏற்ற இடம். ஆனால், இப் போது ஸ்டாலின் ஆட்சி யால் வாய்ப்புகளைத் தவற விட்ட இடமாக மாறியுள் ளது. புதிய தொழில்களால் தங்களுக்கு வேலை கிடைக் கும் என நம்பிய தமிழக இளைஞர்களை ஏமாற்றிய மு.க.ஸ்டாலின் அரசுக்கு கடும் கண்டனம்.

அதிமுக ஆட்சி அமைந் ததும் தமிழகம் மீண்டும் எழும்; தொழில் துறையை அதிமுக ஆட்சி கட்டமைக் கும்; மீட்டெடுக்கும்.

இன்று நம்மை விட்டுச் சென்ற தொழில் நிறுவனங் கள், 2026 மீண்டும் தமிழகத் தைத் தேடி வரும் எனத் தெரி வித்துள்ளார் எடப்பாடி பழனிசாமி.

தவறான தகவலை பரப்பக் கூடாது

சென்னை, நவ.15: வெளிநாட்டு முத லீடு குறித்து எதிர்க் கட்சித்தலைவர் தவ றான தகவலை பரப் பக்கூடாது என்று தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் 'எக்ஸ்' தளத்தில் சனிக்கிழமை வெளியிட்ட பதிவு: எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி தொழில் துறை முதலீடுகள் பற் றியோ பரவலாக்கப்பட்ட வளர்ச்சி பற்றியோ வேலை வாய்ப்புகள் பற்றியோ எந் தவித அடிப்படை புரித லின்றி வழக்கம்போல குற் றச்சாட்டுகளை தெரிவித் துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு என்பது சாதாரண விளை யாட்டு அல்ல. தமிழகத் தின் எந்த இடத்துக்கு முத லீடு செல்கிறதோ அதைப் பொருத்து ஊக்கத்தொகை வழங்குவது, அப்பகுதி யில் முன்னரே அமைந்தி ருக்கும் தொழிற்சாலைக ளின் வகை போன்ற பல விஷயங்களை பொருத்தே அரசு ஒரு முடிவை எடுக் கிறது. அதற்கு பிறகே முத லீடு உறுதி செய்யப் பட்டுஒருஒப்பந்தம் முதலீட்டாக மாறுகி றது. அந்த முதலீட் டின் மூலம் உருவா கும் பரவலாக்கப் பட்ட வளர்ச்சியை உ ரு வா க் கு வ தே முதல்வர் மு.க. ஸ்டாலினின் நோக்கமா கும். அதுவே நமது இலக்கு.

சில மாநிலங்களில் வறண்ட பெரிய நிலப்பரப் புகள் உள்ளன.

தமிழகத்தின் இருப்பவை அதிக மதிப்புள்ள நிலங்க ளாகும்.

புதிதாக முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப் படும் ஊக்கத்தொகை மற் றும் அந்த நிறுவனங்கள் மூலம் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகள் ஆகிய வற்றின் மதிப்பை ஒப்பிடா மல் நிலங்களை கொடுத்து விட முடியாது.

தமிழகத்தின் பரவலாக் கப்பட்ட வளர்ச்சி நோக் கத்துக்கு உதவாத முதலீ டுகளுக்கு நாம் அதிக முக் கியத்துவத்தை கொடுப்ப தில்லை.

ஏனென்றால், முதல்வர் மு.க.ஸ்டாலின் மீது உள்ள நம்பிக்கையின் காரணத் தால், அதே இடத்தில் பல நிறுவனங்கள் பல திட்டங் களோடு முதல்வரின் அலு வலகத்தை நாடுகிறார்கள்.

2021-இல் திமுக ஆட்சி அமைத்ததுமுதல்தற்போது வரை போடப்பட்ட ஆயி ரத்துக்கும் மேற்பட்ட புரிந் துணர்வு ஒப்பந்தங்களில் 77 சதவீதம் உறுதி செய்யப்பட் டுள்ளது.

மு த லீ ட் டா ள ர் க ள் இடையே தமிழகம் இந்தி யாவின் மிகச் சிறந்த நம்ப கத்தன்மை நிறைந்த மாநி லம் என்ற பெயரை பெற் றுள்ளது. இந்த நற்பெயரை நாம்மிகுந்த முதிர்ச்சியோடு காப்பாற்ற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது அரசியல் கணக்கு களுக்காக திமுக அரசை விமர்சிப்பதாக நினைத்து, மாநிலத்தின் வளர்ச்சிக்கு கடின உழைப்பை வழங்கும் தொழிலாளர்களான மக் களை அவமதிப்பது ஏற்பு டையதல்ல.

மேலும் இப்படி பொய் யான தகவல்களை வெளியி டுவது எதிர்க்கட்சித் தலை வருக்கு அழகல்ல. இனியும் தொழில்துறை சார்ந்த முத லீடுகள் தொடர்பான தன் அறியாமையை வெளிப்ப டுத்த வேண்டாம் எனப் பதி விட்டுள்ளார் அவர்.

எஸ்ஐஆரால் லட்சக்கணக்கானோரின் வாக்குரிமை பறிபோக வாய்ப்பு: விஜய்

சென்னை, நவ.15: வாக்காளர் பட்டி யல் சிறப்பு தீவிர திருத்தத்தால் (எஸ் ஐஆர்) லட்சக்கணக் கானோரின் வாக்கு ரிமை பறிபோகும் வாய்ப்பு உள்ளதாக தவெக தலைவர் விஜய் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் தனது 'எக்ஸ்' தளத்தில் சனிக்கி ழமை பகிர்ந்த காணொலி: தமி ழகத்தில் கடந்த ஜனவரியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப் பின்படி 6.36 கோடி வாக்கா ளர்கள் உள்ளனர். தற்போது, தமிழகம் முழுவதும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று எஸ்ஐ ஆர் படிவங்களை வழங்கி வரு கின்றனர். ஒரு மாத அவகாசத் துக்குள் 6.36 கோடி வாக்காளர் களுக்கும் விண்ணப்ப படிவம் எப்படி கொடுக்க முடியும்? படிவம் வழங்குவதற்காக பிஎல்ஓ வீட்டுக்கு வரும்போது, குடியி ருப்போர் வெளியே சென் று விட் டால் என்ன செய்வது? இறந்தவர்களை கண் டறிந்து அவர்களது பெயர்களை நீக்குவ துடன், புதிய வாக் காளர்களின் பெயர் களை இணைப்பதே போது மானது. கடந்த தேர்தல்களி லும் இதே நடைமுறைதான் பின்பற்றப்பட்டது. அப்ப டியிருக்க தற்போது மட்டும், அனைத்து வாக்காளர்களை யும் சரிபார்க்க வேண்டிய அவ சியம்என்ன?. இதுபோன்றபல் வேறு கேள்விகள் மக்கள் மன தில் நிலவுகின்றன. அதுவே, எஸ்ஐஆர்-நடைமுறையை தவெக தொடர்ந்து எதிர்ப்ப தற்கு முக்கியக் காரணமாகும்.

வரும் 2026 தேர்தலில் இளைய தலைமுறையினர், முதல்முறை வாக்காளர்கள் முக்கியப் பங்காற்றவுள்ளனர். இதனால், அவர்களது பெயர் களை வாக்காளர் பட்டியலில் இடம்பெறாமல் செய்ய இந்த ஆட்சியாளர்கள் அனைத்து வகை முயற்சிகளையும் மேற் கொள்வார்கள். ஆகையால், மிகவும் கவனமாக, படிவத்தை முறையாக பூர்த்தி செய்ய வேண்டும்.

வருகிறதேர்தலில்தமிழகமே வாக்குச்சாவடி முன்பு திரண்டு நிற்க வேண்டும். வாக்குரிமை மற்றும் ஜனநாயகத்தை ஆயு தமாகக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற்று தவெகவின் பலத்தை காட்டுவோம் எனத் தெரிவித்துள்ளார் விஜய்.

இன்று தவெக ஆர்ப்பாட் டம்: இதனிடையே, வாக்கா ளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர் பான குளறுபடிகளைக் கண் டித்து,தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைமையிடங்களி லும் ஞாயிற்றுக்கிழமை (நவ. 16) தவெக சார்பில் ஆர்ப்பாட் டம் நடைபெறவுள்ளது.

தேர்தல் ஆணையத்துக்கு விஜய் கடிதம்

தேர்தல் ஆணையம் சார்பில் நடைபெறும் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டங்களுக்கு தவெகவுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என வலியுறுத்தி தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு தவெக தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

'வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட தவெக தயாராக உள்ளது. இச்சூழலில், தேர்தல் ஆணையம் சார்பில் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்க தவெக வுக்கு அழைப்பு நிராகரிக்கப்படுகிறது. இது, அரசியல் களத்தில் எங்களது சமவாய்ப்பை பாதிப் புக்குள்ளாக்குகிறது. எனவே, வரவிருக்கும் அனைத்து தேர்தல் தயாரிப்பு கூட்டங்கள், ஆலோ சனைகள், ஒருங்கிணைப்பு அமர்வுகள் ஆகியவற்றில் தவெகவுக்கு முறையான அறிவிப்புடன் பங்கேற்க அனுமதி வழங்க வேண்டும்' என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார் அவர்.

அதிமுக ஆட்சியில் மருத்துவக் கல்லூரிகளை கட்டியதில் முறைகேடு புகார்: சிபிஐ விசாரணை கோரி மனு

சென்னை, நவ.15: தமிழ்நாட்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் கட்டியதில் நடந்துள்ள முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிந்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீ திமன்றத்தில் மனு தாக்கல் செய்யப் பட்டது.

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜசேகரன், சென்னை உயர்நீதிமன் றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழ் நாட்டில் கடந்த அதிமுக ஆட்சியில் அரியலூர், கள்ளக்குறிச்சி, திருவள் ளூர், நாமக்கல், நாகப்பட்டினம், விரு துநகர், திண்டுக்கல், ராமநாதபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் திருப் பூர் ஆகிய 11 மாவட்டங்களில் மருத் துவக் கல்லூரிகள் கட்டப்பட்டன.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பொதுப்பணித் துறை அமைச்சராக பதவி வகித்தபோது இந்த மருத்துவக் கல்லூரிகள் கட்டப் பட்டன. தேசிய மருத்துவ ஆணையத் தின் விதிமுறைகளுக்கு எதிராக இந்த கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த முறைகேடு தொடர்பாக கடந்த 2021-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புத் துறை போலீஸாரிடம் புகார் அளித்தேன்.அந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததால், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக் குத் தொடர்ந்தேன்.

வழக்கு விசாரணையின்போது, புகார் குறித்து விசாரணை நடந்து வரு வதாக போலீஸார் தரப்பில் கூறப்பட் டது. இதனால், அந்த வழக்கை உயர்நீ திமன்றம் முடித்துவைத்தது.

அதன்பின்னர், எந்தவொரு நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. புகார் அளித்து 5 ஆண்டுகள் ஆகி விட்டது.

எனவே, தனது புகார் மீது சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண் டும். இந்த மருத்துவக் கல்லூரிகள் மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளன. முன்பு இது போன்ற புகார்களை சிபிஐ வழக்குப்ப திவு செய்து விசாரிக்கலாம்.

ஆனால், 2023-ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு பிறப்பித்த அரசாணையின் படி, மாநில அரசின் ஒப்புதல் இல்லா மல் சிபிஐ நேரடியாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்கக் கூடாது.

இந்த அரசாணை செல்வாக்கு உள்ளவர்களை காப்பாற்றும் வகை யில் உள்ளது. எனவே, இந்த அரசா ணையை ரத்து செய்ய வேண்டும். மருத்துவக் கல்லூரிகள் கட்டியதில் நடந்துள்ள முறைகேடு குறித்து வழக் குப்பதிவு செய்து விசாரிக்க சிபிஐக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறியி ருந்தார்.

இந்த மனு விரைவில் விசார ணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
செங்கல்பட்டு மாவட்டம்

மின்னணு முறையில் இரு உறைமுறை அடிப்படையிலான ஒப்பந்த அழைப்பு
ந.க.எண் 1693/2024/அ1 நாள். 14.11.2025

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 -இன் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், ஆலந்தூர் தொகுதி பல்லாவரம் தாலுக்கா, புனித தோமையர் மலை வருவாய் கிராமத்தில் சர்வே எண்.442ல் முதலமைச்சரின் சிறு விளையாட்டு திடல் அமைத்தல் பணி .

1. ஒப்பந்த அழைப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ. 300.00 லட்சம்
2. செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை ரூ.3,00,000/-
3. ஒப்பந்த நடுனாக்களை மின்னணு கொள்முதல் முறையில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தில் 17.11.2025 முதல் 03.12.2025 வரையிலான காலத்தில் பதிவேற்றம் செய்யலாம்.
4. ஒப்பந்த நடுனா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய இறுதிநாள் மற்றும் நேரம் : 03.12.2025 பி.ப. 3.00 மணிவரை.
5. ஒப்பந்த நடுனாக்களின் தொழில்நுட்ப உறைகள் மின்னணு முறையில் பதிவிறக்கம் செய்யப்படும் நாள் மற்றும் நேரம். 03.12.2025 பி.ப. 5.00 மணிமுதல்.
6. முழுமையான விவரங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நடுனாக்களில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது

செ.ம.தொ.இ/6177/ஒப்பந்தப்புள்ளி/2025

திட்ட இயக்குனர்,
மா.ஊ.வ.முகமை, செங்கல்பட்டு.

டச்சு வங்கி AG

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் அசையாச் சொத்தின் விற்பனை

கீழே கையொப்பமிட்டுள்ளவர் M/s. டச்சு வங்கி AG என்கிற # 4-4A, மேற்கு டவர், சன்னி சைடு, ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 எனும் முகவரியில் ("டச்சு வங்கி AG") தனது வணிகத்தளம் ஒன்றைக் கொண்டுள்ள நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்) பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (விதிகள்) விதி 9-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் 20.04.2017 நாளிட்ட கோரிக்கை அறிவிப்புகளைக் கடன்தார(கள்) / கூட்டுக் கடன்தார(கள்) M/s. கோத்தாரி பாத் கான்செப்ட்ஸ் ("கடன்தார்"), திரு. ஒம்பிரகாஷ் கோத்தாரி ("கூட்டுக் கடன்தார்") மற்றும் திரு. விஷால் கோத்தாரி ("கூட்டுக் கடன்தார்") ஆகியோருக்கு அனுப்பி நிலுவையில் உள்ள ரூ.4,24,39,943.65 (ரூபாய் நான்கு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று மற்றும் பைசா அறுபத்தைந்து மட்டும்) தொகையை அதன் வட்டியுடன் சேர்த்து அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர் அத்தொகையினைச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு, கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8 ஆகியவற்றின் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ளதும் வங்கியிடம் அடமானத்தில் உள்ளதுமான சொத்தினை சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

இதையடுத்துத் தற்பொழுது பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது டச்சு வங்கி AG, # 4-4A, மேற்கு டவர், சன்னி சைடு, ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 எனும் முகவரியில் 24.12.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு "உள்ளது உள்ளபடி" மற்றும் "அப்படியில்லை பொது ஏலத்தின் வாயிலாக விற்பனை செய்யப்பட உள்ளது. இதற்கான ஏலப்புள்ளிகள் கீழே அளிக்கப்பட்டுள்ள நடைமுறையின்படியும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படியும் மூடி முத்திரையிட்ட உறையில் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்.	கடனீட்டு சொத்து முகவரி	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை	ஏல நாள்
1.	இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் - அத்திப்பட்டு கிராமம், எபினேசர் அவென்யூ, அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம். சர்வே எண் 105/1, 105/2, 105/3, மனை எண் 3 & 4, பரப்பளவு 5010 சதுர அடி மற்றும் அங்குள்ள கட்டடம் உட்பட. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 33 அடி அகலமுள்ள பொதுச் சாலை, தெற்கு: மனை எண் 5 & 6, கிழக்கு: மனை எண் 2, மேற்கு: 24 அடி அகலமுள்ள பொதுச் சாலை. இது அம்பத்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ.3,78,00,000/-	ரூ.37,80,000/-	24.12.2025

மேற்கண்ட சொத்து விவரங்கள் ஆன மட்டும் வங்கி அறிந்த வரையிலும் தெரிய வந்த தகவல்களின் அடிப்படையிலும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றில் ஏதேனும் பிழையோ முரண்பாடோ விடுபாடோ இருப்பின் அதற்கு வங்கி பொறுப்பாகாது. ஆகவே ஒப்பந்தப்புள்ளிதாரர்(கள்) / விலைகோருநர்(கள்) / ஆர்வமுள்ள ஏலதாரர்(கள்) / வாங்குநர்(கள்) ஒப்பந்தப்புள்ளியைத் தாக்கல் செய்யும் முன்னர் சொத்து தொடர்பான தாங்களே சொந்த விருப்பத்தின் பேரில் தங்களை நிறைவு செய்து கொள்ள வேண்டுகிறோம். கூடுமான அளவில் வங்கி அறிந்த வரையில் சொத்தின் மீது வில்லங்கம் ஏதும் இல்லை என்பதோடு உரிய சட்ட நடைமுறைகளைக் கடைப்பிடித்து இச்சொத்தினை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

பொது ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. சொத்தினை **08.12.2025 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை** ஆய்வு செய்யலாம். ஏலப்புள்ளிகளை உறையினுள் மூடி முத்திரையிட்டு அத்துடன் கடன்தாரர்தொகை (EMD) **ரூ.37,80,000/- (ரூபாய் மூப்பத்தேழு லிலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)** தொகைக்கான கேட்பு வரைவோலையை (D.D) / செலுத்தாணையை (P.O) "M/s. Deutsche Bank AG EMD" எனும் பெயருக்கு இணைத்து **23.12.2025 அன்று அல்லது அதற்கு முன் பிற்பகல் 2.00 மணிக்குள்** கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகமான # 4-4A, மேற்கு டவர், சன்னி சைடு, ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 எனும் முகவரியில் அமைந்துள்ள டச்சு வங்கி AG அலுவலகத்தை வந்து அடையுமாறு தாக்கல் செய்ய வேண்டும். டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் இல்லை. ஏலப்புள்ளிப் படிவத்துடன் ஏலதாரர் தனது அடையாளச் சான்று, முகவரிச் சான்று (கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம் முதலானவற்றின் நகல்) மற்றும் வருமான வரித்துறையால் அளிக்கப்பட்ட நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டையின் நகல் ஆகியவற்றையும் இணைக்க வேண்டும்.

2. ஏலதாரர்கள் https://www.bankeauctions.com இணைய முகப்பிலும் டேவணித்தொகையைச் செலுத்தலாம் (https://www.bankeauctions.com இணைய முகப்பில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையை NEFT முறையில் செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கின் விவரங்கள்: கணக்கு எண் - 078494027010068, கணக்கின் பெயர் - Deutsche Bank AG EMD, பயனாளர் பெயர்: டச்சு வங்கி AG, IFSC எண் - DEUT0784PBC. மேற்குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் NEFT முறையில் செலுத்தலாம். இணைய முகப்பில் ஏலதாரர் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஏலதாரர் / வாங்குநர் **23.12.2025 அன்று பிற்பகல் 2.00 மணி** (ஏல ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்) அல்லது அதற்கு முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணைய முகப்பில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு அல்லது கேட்பு வரைவோலை நகல், ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று எனும் வகையில் [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] சொந்தக் கையொப்பமிடப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் ஒளிப்பட நகல்களையும் (scanned copies) [https://www.bankeauctions.com இணைய முகப்பில் தரவிறக்கிக் கொள்ளலாம்] முழுமையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்ற வேண்டும்.

3. முறையாக நிரப்படாத விலைகோரல்கள் அல்லது டேவணித்தொகை இணைக்கப்படாத விலைகோரல்கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிய நாளுக்கோ நேரத்துக்கோ பின்னர் வரப்பெறும் விலைகோரல்கள் தகுதியுள்ளவையாகக் கருதப்பட மாட்டா. அவை முறையே தள்ளுபடி செய்யப்படுவதற்கு உரியவை. டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.

4. பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை தேவைப்படுகிற ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., உத்யோக் விகார், கட்டம்-2, கல்ஃப் பெட்ரோசெம் கட்டம், கட்டம் எண் 301, குர்கான், அரியானா, அஞ்சல் குறியீடு - 122015, மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, உதவி எண்கள்: 124-4302020 / 21 / 22 / 23, 7291981124 / 1125 / 1126, விற்பனை தொடர்பான கேள்விகளுக்கு: sales@bankeauctions.com, 7291981129. இணைய இணைப்பில் கோளாறு ஏதும் ஏற்பட்டால் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ வங்கியோ M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., நிறுவனமோ பொறுப்பேற்க முடியாது. தாங்கள் ஏல நிகழ்வில் கலந்து கொள்ளத் தொழில்நுட்ப அடிப்படையில் போதுமான அளவு முன்னேற்பாடுகளோடு இருப்பதை ஏலதாரர்களே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. இணைய வழி உள் ஏலக் கோரலின்பொழுது ஏலதாரர் தனது ஏலத்தொகையை ஏல உயர்வுத்தொகையின் அளவில் அல்லது அதன் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம். E-ஏலம் முடிவடைவதற்கான கடைசி 5 நிமிடங்களில் ஏலக்கோரல் எழுப்பப்பட்டால் முடிவு நேரம் தானாகவே மேலும் 5 நிமிடங்கள் நீட்டிப்பாகும் (e-ஏல நடைமுறை முடியும் வரை இது தொடரும்). அவ்வாறு ஏலக்கோரல் எழுப்பப்படாவிட்டால் ஏலம் தானாகவே முடிவடையும். e-ஏல நடைமுறை முடிவடையும் நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு (குறைந்தபட்ச விலைக்குக் குறையாமல்) ஏலம் கோரிய ஏலதாரரே தேவையான சரிபார்ப்புக்குப் பின் வெற்றி பெற்ற ஏலதாரராக அதிகாரப்பூர்வ அலுவலரால் / ஈடு பெற்றுக் கடனளித்தவரால் அறிவிக்கப்படுவார்.

6. வெற்றி பெறும் ஏலதாரரின் டேவணித்தொகை விற்பனை விலையின் பகுதியாகத் தக்க வைத்துக் கொள்ளப்படும். வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகைகள் திருப்பித் தரப்படும். டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது. வெற்றி பெறும் ஏலதாரர் ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை தவிர விற்பனை விலையில் 25% தொகையை அவரது ஏலத்தொகை அதிகாரப்பூர்வ அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செலுத்துவதோடு மீதமுள்ள 75% தொகையைச் சொத்தின் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பின்பான 15ஆவது நாள் அல்லது அதற்கு முன் அல்லது இரு தரப்பினராலும் எழுத்தளவில் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய காலநீட்டிப்புக்குள் செலுத்த வேண்டும். உரிய காலக்கட்டத்துக்குள் மொத்த விற்பனைத் தொகையையும் செலுத்தத் தவறினால் வாங்குநர் செலுத்திய டேவணித்தொகையை மற்றும் / அல்லது நாளது வரையில் அன்னார் செலுத்திய வேறு தொகையைப் பறிமுதல் செய்யவும் சொத்தின் மறு ஏலத்தை முன்னெடுக்கவும் வங்கிக்கு உரிமை உண்டு. தவறிழைத்த வாங்குநருக்குச் சொத்தின் மீதோ அதன் மறு விற்பனையில் பெறப்படக்கூடிய தொகையின் எந்தப் பகுதியின் மீதோ எந்த உரிமைகோரலும் கிடையாது.

7. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து e-ஏலத்தில் கலந்து கொள்வதற்கு முன் M/s.C1 இந்தியா பிரைவேட் லிட்., நிறுவனத்தின் https://www.bankeauctions.com இணைய முகப்பில் மற்றும் டச்சு வங்கியின் https://www.deutsche.bank.in/en/auction-notices.html இணைய முகப்பில் உள்ள e-ஏலத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றைப் படித்துப் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. வாங்குநர் செலுத்தும் அனைத்துத் தொகைகளும் "Deutsche Bank AG" எனும் பெயரிலான கேட்பு வரைவோலை / செலுத்தாணை வடிவிலேயே அமைய வேண்டும்.

9. விற்பனை விலையை முழுமையாகப் பெற்றுக் கொண்ட பின்னர் வங்கியானது வாங்குநரின் / அன்னார்தம் வாரிசுதாரரின் பெயருக்கு விற்பனைச் சான்றிதழை வழங்கிச் சொத்தின் சுவாதீனத்தை வாங்குநரிடம் கையளிக்கும்.

10. கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மேலே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது அனைத்து வகையிலும் முழுக்க முழுக்க வாங்குநரின் பொறுப்புக்கே உட்பட்டது. தீ விபத்து அல்லது திருட்டு அல்லது இதர விபத்துகளால் ஏதேனும் இழப்போ சேதமோ ஏற்பட்டாலோ வேறு ஏதேனும் இடர்ப்பாடுகள் நேரிட்டாலோ அவை அனைத்தும் வாங்குநரின் பொறுப்பையே சாரும். இதன் பொருட்டு எந்த வகையிலும் விற்பனையை மறுக்க வாங்குநருக்கு உரிமை இல்லை.

11. அனைத்து வகையிலும் மேற்கண்ட சொத்தின் விற்பனையானது கண்டிப்பாக "உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையிலேயே நடைபெறும். ஆன மட்டும் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலர் அறிந்த வரையிலும் தெரிய வந்த தகவல்களின் அடிப்படையிலும் சொத்தின் மீது வேறு எந்த வில்லங்கமும் இல்லை.

12. சொத்து தொடர்பான முத